**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 04.08.2025**

**O.S. 206/2022**

**வா.சா.1 – சொரிமுத்து**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

ஈத்தாமொழி வெள்ளாளர் சமுதாய தர்மவினாயகர் தேவஸ் தானத்திற்கு உட்பட்ட சொத்தை டிரெஸ்டின் உறுப்பினருக்கு உரிமைப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் அதில் 04.06.2002 அன்று 50 சென்ட் எனக்கு விலைக்கு தந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை எனது தகப்பனார் தரைவாடகைக்கு எடுத்ததற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான் ஆனால் தந்தார்கள். வழக்கு பட்டிகை சொத்தை எந்த வருடம் எனது தகப்பனார் தரைவாடகைக்கு எடுத்தார் அதற்கான ஆவணங்கள் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்திற்கு வழக்கு பட்டிகை கட்டிடத்திற்கு நானோ என் தாயாரோ வாடகை கொடுத்ததற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். ஆனால் கட்டியுள்ளோம்.

வழக்கு பட்டிகை கட்டிடத்திற்கு வாடகை எந்தெந்த வருடம் என்னென்ன விலைக்கு வாடகை உயர்த்தப்பட்டது என்ற விபரம் குறித்து சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியாது. எனக்கு தற்போது 66 வயதாகிறது. 66 வருடமும் வழக்கு பட்டிகை கட்டிடத்திற்கு வாடகை கொடுத்ததற்கான ரசீதுகள் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். டிரெஸ்டில் எந்த வருடம் எனது தகப்பனாருக்கு கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் எனது ரேஷன் கார்டோ, ஆதார் அட்டை கிடையாது என்றால் சரியல்ல.

எனது ரேஷன் கார்டோ, ஆதார் அட்டையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். வழக்கு பட்டிகை சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும் 34/115. வழக்கு பட்டிகை கட்டிடம் எத்தனாவது வார்டில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **என்னிடம் காட்டப்படும் வாக்காளர் பட்டியலில் எனது பெயர் 14 வது இடத்தில் உள்ளது அதில் இருக்கும் புகைப்படம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி வாக்காளர் பட்டியல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி வாக்காளர் அட்டை மற்றும் ரேஷன் அட்டையில் நான் தற்பேது வசிக்கும் முகவரி உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது இருப்பது துவரங்காடு என்றால் சரிதான். துவரங்காடு தோவாளை தாலுக்கா கன்னியாகுமரி தொகுதி என்றால் சரிதான். மேற்படி முகவரியில் நானும் மனைவியும் தாமசிக்கிறோம் எனது மகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். எனது மகள் திருமணம் முடிந்து செண்பகராமன்தூரில் வசித்து வருகிறார் மேற்படி செண்பகராமன்புதூர் தோவாளை தாலுகா என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து இருக்கும் இடம் அகஸ்தீஸ்ரம் தாலுகா என்றால் சரிதான். 30 வருடத்திற்கு முன்பு வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து வெளியேறி துவரங்காட்டில் தாமசிக்கிறேன் என்றால் சரியல்ல 5 வருடம் தான் ஆகிறது.

சங்கர வடிவு எனது அம்மா என்றால் சரிதான். எனது தாயார் டிரெஸ்டிக்கு எதிராக அ.வ.எண்.332/1987 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.332/1987 என்ற வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தும் இந்த வழக்கு பட்டிகை சொத்தும் மற்றும் சொத்துக்களும் குறித்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.332/1987 என்ற வழக்கு டிரெஸ்டு நபர்கள் இந்த வழக்கு பட்டிகை சொத்தும் மற்றும் இரண்டு  சொத்துக்களும் குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.332/1987 , 01.03.1990 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். **மேற்படி அ.வ.எண்.332/1987-ன் தீர்ப்பின் நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது தகப்பனார் அவரது காலத்தில் ரூ.1,50,000/- வீடு கட்டுவதற்காக செலவு செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.

பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை வீடானது 2¾ சதுர லிங்ஸ் என்று குறிப்பிட்டுள்ளது அதில் நான் உரிமையோடும் அனுபவத்தோடும் வசித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2¾ சதுர லிங்ஸ்ஸில் வீடு கட்ட இயாது வீடு கட்டவும் இல்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு நாங்கள் மூன்று ஆண் பிள்ளைகள். ஒரு பெண் பிள்ளை அவர் காலஞ்சென்று விட்டார். எனது சகோதரர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள் அவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். சகோதரர்கள் எனக்கு வீட்டை விற்றதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். சகோதரர்கள் எனக்கு வீட்டை விற்றதாக குறிப்பிட்டுள்ளேன் அது எந்த தேதி என்று தெரியாது என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை நான் எனது சகோதரர்களை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் ரேகா என்பவர் வசித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபரை நானும் எனது ஆட்களும் வெளியேற்றியதால் ஈத்தாமொழி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததன் பேரில் எனது மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரியல்ல அது பொய் புகார்.

**<u>வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**